சக்ரவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி"

VOL-10 தொகுதி-10 | July ஜூலை மீ 1915. | No-12. பகுதி-12.

அரசன் சிறப்பு.

உலகத்தில் அரசனில்லாது போயின், பலமில்லாதவர்கள் பலமுள்ளவர்களின் மீதுள்ள பயத்தினா லழிந்து போவார்கள். ஆகையால், இவ்வுலக மழியாமலிருத்தற் பொருட்டுக் கவுடள் அரசனைப் படைத்தார்.

இந்திரன, வாயு, யமன், சூரியன், அக்கினி, வருணன், சந்திரன், குபேரனென்னு மிவர்களினமிசங்களினால் அரசன் படைக்கப்பட்டான். இத்தேவர்களின் அமிசமா யிருக்கின்ற படியால் அரசன் மக்களியாவரினும் மிக்க காந்தி யுடையவனும் பாவரையு மாளுதற்குரிய வீரிய முள்ளவனுமா யிருக்கின்றான்.

இவ்வரசன் சூரியன் போன்று தன்னைப் பார்ப்பவர்களின் கண்களையும் மனத்தையும் தகிக்கின்றமையின், உலகி லொருவரும் அவனை நேரேநின்று பார்ப்பதற்குரியராகா திருக்கின்றனர்.

அவ்வரசன் தனது மகிமையினால் சமயத்திற் கேற்றவாறு அக்கினியாகவும், வாயுவாகவும், சூரியனாகவும், சந்திரனாகவும், யமனாகவும், குபேரனாகவும், வருணனாகவும், இந்திரனாகவு மிருப்பான்.

அவ்வரசன் சிறுவனாக விருந்தாலும், அவனை மனிதனென் றவமானஞ் செய்தல் கூடாது; என்னை? மேன்மையுடைய தேவர்

களின் கூட்டமே அவ்வரசன் வடிவமாக விருக்கின்றதல்லவா? அக்கினி அஜாக்கிரதையாகத் தன்னருகில் வந்தவனை மாத்திரம் சுடும். அரசனென்னு மக்கினி கோபித்துக் கொண்டாலோ அது தனதானிய புத்திர களத்திராதியரையு மழித்துவிடும்.

அவ்வரசன் காரியா காரியங்களையும் தனது சக்தியையும் தேச காலங்களையும் செவ்வையாக ஆலோசித் தறிந்து, தருமஞ் சித்தித்தற் பொருட்டு, பல வடிவங்களை யெடுத்துக்கொள்ளுகிறான்.

எவ்வரசனது தயவினால் திரவியமும் சத்துரு ஜயமுமுண்டாகின்றனவோ, எவனது துவேஷத்தினால் மரணமு முண்டாகின்றதோ அவன் தேஜோ வடிவனல்லவா? ஆதலால், திவியத்தை விரும்பியவனும் சத்துருஜயத்தை விரும்பியவனும் பிழைத்திருப்பதை விரும்பியவனும் அவனை எதிர்த்தல் கூடாது.

அவ்வரசனை எவன் அறிவில்லாது துவேஷிக்கின்றானோ அவன் றானகவே யழிந்து போகின்றான். அரசனும் அவனழிவதைக் குறித்து யோசிக்கின்றான்.

ஆதலால், அவ்வரசன் எதை யனுஷ்டிக்கும் படியும், எதை நீக்கும்படியும் உத்தரவு செய்கின்றானோ அதை ஒருவரும் தடுத்தல் கூடாது.

சுக நூல்.

25-ம் பாடம்.

மூளையும், நாபிமண்டலமும்.

நமது சரீரத்தின் அங்கங்களெல்லாம் நாபிமண்டலத்தால் ஆளப்பட்டு வருகின்றன. நாபிமண்டலத்தை ஒரு மின் தபால் மண்டலமென்னலாம். மிகவும் சன்னல் பின்னலான மின் தபாற் கம்பிகளை நரம்புகளுக்கு ஒப்பிடலாம். காரியஸ்தலம் மூளை; அதினின்று சதா உத்தரவுகள் பிறக்கின்றன; மற்ற அங்கங்களினின்றும், வெளியிலிருந்தும் சேதிகள் அதனிடம் போய்ச் சேருகின்றன.

மூளையானது எண்ணிறந்த இரத்தக் குழாய்களால் நிறையப் பெற்றிருக்கின்றது. அக்குழாய்கள் அறுந்துபோனாலும் அல்லது

அவற்றில் எவ்விதமான மாறுபாடுகள் ஏற்பட்டாலும், மூளை கெட்டு அதனால் மிகவும் கொடுமையான தீமைகள் விளையக் கூடும். நரம்பு சம்பந்தமான வியாதிகளெல்லாம் இங்ஙனம் உண்டாகின்றன. இசிவு, நரம்புகளின் எரிச்சல், மயக்கம், பாரிச அல்லது முழுவாதம், காக்கைவலி, பைத்தியம் முதலிய ரோகங்கள் நரம்பு வியாதிகளாம். இவ்வியாதிகளுக்குள் குடிவெறியும கஞ்சாவெறியும் மிகவும் கெடுதியானவை. அவற்றால், நாபிமண்டல முழுதும் கெட்டு, வாதரோய் உற்பத்தியாகும். லாகிரி பானங்கள் மூளைக்குக் கொடிய விஷங்களாய், ஒழுங்கில்லாத நடையுடன் ஜீவிப்பவனுடைய நாபிமண்டலம் எங்ஙனம் சுகமான ஸ்திதியில் இருக்கும்? அளவு மீறினால். அமிருதமும் விஷமாகுமல்லவா? மிதமில்லாத எச்செய்கையும் நாபிமண்டலத்தையே தாக்குகிறது. சீக்கிரமாவது, பொறுத்தாவது அதனுடைய பலன் வந்தேதீரும்: இக்காலத்தில் நாம் காபி, தேப்பானம், மது முதலிய நரம்புகளைத் தூண்டும் பானங்களை உபயோகித்தல் நாகரீகமெனத் தப்பெண்ணங்கொண்டு, ஏராளமாகக் கைக்கொண்டு விட்டோம்; வாதரோய்க்குக் காரணமானதும், நரம்புகளை உணர்ச்சி அறறுப் போகும்படி செய்வதுமாகிய புகையிலை போஜனத்தைப்போல ஒரு அவசியமாகி விட்டது. உண்மையில் புகையிலையை உபயோகிக்காதவர்கள் சிலரேயாம். நமது தேசததில், முக்கியமாகத் தென்னிந்தியாவில், பொழுது விடிந்த உடனே, ஒவ்வொருவனும் புகையிலையை வாயில்போட்டுக் கொள்வது முதல் காரியம்: மற்ற வேலை பின்னால் கவனிக்கப்படும். இது சேர, சோழ, பாண்டிய தேசங்களின் சம்பிரதாயம். என்ன அறிவீனம்! பொதுவாக புகையிலையை எவ்விதமாக உபயோகித்தாலும், விஷம் விஷமேயாம்.

மேலே சொன்னபானங்களையும், புகையிலையையுந் தவிர, நாபி மண்டலத்தைக் கெடுத்துக் கொள்வதற்கு வேறுசில உபாயங்கள் உள. அவற்றில் பிரதானமானவை, நாடகம் முதலிய கண் விழிக்கவேண்டிய கச்சேரிகள். இவை, முக்கியமாக மூளையைத் தூண்டி, லாகிரி பானங்களைக் காட்டிலும் அதிகதீமையை விளைக்கக் கூடியன. அவற்றால் நித்திரைகாலம் தவறிப்போவதுமன்றி, பகல் இரவாகவும், இரவு பகலாகவும், விதிக்கு விரோதமாகக்கழிக்கப்படும். ஆகையால் அவற்றை மிதமின்றி அநுபவித்தல் தவறாம்.

26-ம் பாடம்.

புலன்கள்:—

கண்:—இஃது ஓர் அற்புதமான கருவி. தூரத்திலிருக்கும் வஸ்துக்களை அருகில் காட்டக்கூடிய இரட்டைக் கண்ணாடிகளை அநேகர் பார்த்திருக்கலாம். நாடகத்தில், மேடையின்மீது நடிப்பவர்களைச் சமீபத்தில் பார்ப்பதற்காக பலர் உபயோகிக்கும் கண்ணாடியைத்தான் இரட்டைக் கண்ணாடிகள் என்றோம். அவற்றை உபயோகிப்பதற்கு முன், அவற்றின் உட்கண்ணாடிகளைத் துடைத்து, உருவம் தெளிவாகத் தெரியும் வரையில் அவற்றை முன்னும்பின்னுமாக அசையும்படி திருத்திக்கொண்டே போகிறார்கள். இங்ஙனம் கண்ணாடிகளை அமைத்துக்கொண்ட பிற்பாடு, அவற்றைக்கொண்டு தொலைவிலுள்ள வஸ்துக்களைச் சமீபத்தில் தெளிவாகக் காணலாம்.

நம்முடைய கண் தானாகவே தன்னைத் துடைத்துக்கொள்ளும்; தானாகவே தன்னைச் சுத்தப்படுத்திக்கொள்ளும்; தொலைவிலுள்ள வஸ்துக்களையும், சமீபத்திலுள்ள வஸ்துக்களையும் பார்ப்பதற்குத் தகுந்த விதமாகத் தானாகவே தன்னைச் சரிப்படுத்திக்கொள்ளும். அஃது அப்போதைக் கப்போது ஒவ்வொருவிதமாக அமைத்துக்கொண்டு வஸ்துக்களை அறிகின்றது. தொலைவிலுள்ள வஸ்துக்களை நாம் பார்க்கும்போது, கண் ஒருவிதமாக அமையும். சமீபத்திலுள்ள வஸ்துக்களைப் பார்க்கும்போது வேறு கண்ணாகிவிடும். இதில் ஓர் ஆச்சரியம் என்னவென்றால், மேலே சொன்னவிஷயம் நமக்குக் கிஞ்சிற்றேனும் தெரியாமலேயே நடைபெறுகின்றது.

மேலும் நம்முடைய கண், நமது ஆயுள் முழுதும் வஸ்துக்களைப் பார்ப்பதற்கு ஏற்பட்டிருக்கின்றது. ஒருநாளைக்குக் குறைந்தபக்ஷம் 12-மணி விதமாக ஏறக்குறைய 50-60 வருஷம் வரையில் உபயோகப்படக்கூடிய கண்ணாடியும் உண்டா உலகத்தில்? என்ன அற்புதமான கண்ணாடி, நமது கண்! இவ்வளவு அருமையான கருவி விஷயத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டும். அதைமிகவும் ஜாக்கிரதையாய்ப்பாதுகாக்கவேண்டும். குழந்தைப் பருவத்தில் கண்ணிமையின் உட்புறம் உஷ்ணமாகி, சிவந்து, இமை உப்பிப்போவதுண்டு. அப்போது அலக்ஷியமாக இராமல்,

அவசியம் வைத்தியரைக்கொண்டு தகுந்த சிகிச்சை செய்யவேண்டும். ஏனென்றால் கண்ணோய் மிகவும் கொடியது. அநேகமாய் கண் குருடாய்ப்போவது கண்ணோயினாலேதான் - 100 குருடர்களில் குறைந்தது 4-பேர்கள் தாம் பிறவிக் குருடர்களாம். ஆகையால் நோயுள்ள கண்ணை வெண்காரம் அல்லது படிகாரம் கரைத்த ஜலத்தைக் கொண்டு கழுவுதல் நன்றாம். கண்ணோய் ஒரு தொத்து வியாதி. அதற்குச் சிகிச்சை செய்பவர்களின் கை முதலான அங்கங்கள் மிகவும் பரிசுத்தமாக இருக்கவேண்டும். கண்ணோயுள்ள குழந்தைகளோடு, அந்நோயில்லாத குழந்தைகளை விளையாட விடுதல் தவறாம்.

கண்ணுக்குள்ளே, இருபுறமுங் கவிந்த, சிறிய கண்ணாடி ஒன்றிருக்கிறது. சாதாரணமாகக் கடையில் விற்கப்படும் அம்மாதிரியான கண்ணாடிகளுக்கு ஒரே வடிவு. அவை வேலைக்காரனால் எவ்வடிவாகச் செய்யப்பட்டதோ, அவ்வடிவு மாறாது. நமது கண்ணிற்குள்ளிருக்கும் கண்ணாடி அங்ஙனமன்று. அது, தட்டையாகவும், உப்பித் தடிப்பாகவும், அவசரங்களுக்குத் தகுந்தவிதமாகத் தன்னை அமைத்துக்கொள்ளும்; தொலைவிலுள்ள வஸ்துக்களைப் பார்ப்பதற்கு, அது தட்டையாகிவிடும்; சமீப பார்வைக்காக, அது கொஞ்சம் உப்பித் தடிப்பாகும்; அதனுடைய இயற்கையான வடிவத்தோடு சற்றேறக்குறைய ஒரு அடி தூரத்தில் புஸ்தகத்தை வைத்துக்கொண்டு படிக்கலாம். ஆனபடியால் ஒரு அடி தூரத்திற்குள்ளாக, புஸ்தகத்தை வைத்துக்கொண்டு படிக்கும் வழக்கத்தையுடைய குழந்தைகள், தம் கண்களைக் கெடுத்துக்கொள்ளுகின்றன. அவை ஒரு நாளைக்குக் குறைந்தபக்ஷம் ஆறுமணி நேரம் படிப்பதும், எழுதுவதுமாக இருப்பதால், அவற்றின் கண்கள் அதிசமீபத்திலுள்ள வஸ்துக்களை மாத்திரமே பார்ப்பதற்குப் பழகிவிடுகின்றன. கண்ணாடி, முன்பக்கம் அதிகமாகக் கவிந்து போகின்றது. இக்காரணத்தினால் உலகத்தில் அநேகர் சமீப திருஷ்டி உடையவர்களாக இருக்கிறார்கள்.

இரத்த ஓட்டம், சுவாசம், தேகவளர்ச்சி முதலியவை மிகவும் கிரமமாக நடைபெறுவதற்கு எந்தநிலை உத்தமமோ, அதுவே கண்ணை நல்ல ஸ்திதியில் வைத்திருப்பதற்குத் தகுந்த நிலையாம். சமீப திருஷ்டியாகிய பழுதைத், தகுந்த கண்ணாடிகளைக் கொண்டு திருத்திக் கொள்ளலாம்.

கண்களுக்குச் சிரமம் வரும்படி அவற்றை உபயோகித்தல் தவறு. நடந்துகொண்டே வாசித்தல், வேகமாகஓடும் வண்டிக்குள்ளிருந்து படித்தல் குறைந்தவெளிச்சத்தில் வாசித்தல், வெகுநேரம் சிறிய எழுத்துக்களையும், வஸ்துக்களையும் பார்த்தல் முதலிய வேலைகள் கண்ணைச் சோர்விக்கும். கண்கள் களைத்திருக்கும்போதும், நோயுடனிருக்கும் போதும், அவற்றால் மிகவும் பிரகாசமான வெளிச்சத்தையாவது, அதிகமாக மங்கிப்போன ஒளியையாவது பார்த்தல் தவறு. இரவில் படிக்கும்போது, விளக்கின் ஒளி நேரே கண்ணில் படாதவிதமாக உட்கார்ந்து கொள்ள வேண்டும். தவிரவும் தீப ஒளி, நமது பின் புறத்தினின்று இடது பக்கமாக வருதல் நன்று. பார்க்கப்படும் வஸ்து கண்ணெதிரே சரியான தூரத்தில் இருக்கவேண்டும். வஸ்துக்கள் கண்ணுக்கு அதிசமீபமாகவாவது, அதிக தூரமாகவாவது இருத்தல் கூடாது. 15 அங்குலம் சரியான தூரம்.

பொதுவாக, சிற்சில நேரங்களில் தொலைவிலுள்ள வஸ்துக்களைப் பார்க்கப் பழகுதல் நன்றும். பட்டணத்திலுள்ளவர்கள். கிராமவாசிகளைவிட சமீபதிருஷ்டி உடையவர்களாகக் காணப்படுகிறார்கள். ஏனென்றால், அவர்களுடைய பார்வை வெகுதூரம் செல்லுவதற்கு இடமில்லை; சுற்றிலும் வீடுகள்; நாட்டுப்புறத்தில் இங்ஙனமன்று. பார்வையை வெகுதூரம் செல்லவிடலாம். கப்பற்காரர்கள் நல்ல திருஷ்டியுடையவர்கள்; அவர்களுடைய பார்வைகளுக்கு, சமுத்திரத்தில் தடைகளில்லை அல்லவா ?

வயதாக, வயதாக மனிதர்கள் தூரதிருஷ்டி உடையவர்களாகின்றார்கள். அநேகமாய் 40 வயதுக்குமேல், புஸ்தகத்தை ஒரு அடி தூரத்துக்கப்பால் வைத்துக்கொண்டுதான் படிக்கமுடியும். இப்பழுதையும் தகுந்த கண்ணாடிகளைக் கொண்டு திருத்திக் கொள்ளலாம்.

செவி : இது சப்தக் கருவி. மிகவும் சன்னல் பின்னலானது. அதனுடைய நுண்மை, வயதாக, வயதாகக் குறைந்துகொண்டு போகும். செவியின் வெளிக்குழாயை எப்போதும் சுத்தமாக வைத்திருத்தல் அவசியமாம். அதனுள் படிந்திருக்கும் கரிபமஞ்சள் நிறமான அழுக்கை அப்போதைக்கப்போது எடுத்துவிடுதல்

நன்று. அதனை ஒருகடினமான வஸ்துவைக்கொண்டு எடுத்தல் கூடாது. ஒரு ஈரத்துணியின் மூலையை இலேசாகத் திரித்து வைத்துக்கொண்டு, அதனால் அழுக்கை எடுப்பது உத்தமம். காதில் குச்சிகொண்டு குத்துவது மிகவும் கெட்டவழக்கம்.

மூக்கு சம்பந்தமான வியாதிகளால் (உதாரணமாக மண்டைச் சளி) சப்தக் கருவி கெட்டுப்போவதுண்டு. ஆகையால் சளி பிடிக்காவண்ணம் நடந்துகொள்வதால் செவிக்கும் சுகமாம். பலமான சப்தங்களால், சப்த உணர்ச்சி சோர்ந்துகொண்டே வந்து கடைசியாக அற்றுப்போகும். மணி அடிக்கிறவன், கன்னான், பீரங்கிக்காரன், வெடிசுடுகிறவன் இவர்களெல்லாம் அநேகமாய்ச் செவிடர்களாகவே இருப்பார்கள்.

27-ம் பாடம்.

தொத்து நோய்கள்:—

நோயாளியைத் தொடுவதாலும், அவனுடைய வஸ்துக்களை உபயோகிப்பதாலும் மிகவும் விரைவாகப் பரவும் சுபாவமுடைய நோய்களுக்குத் "தொத்துநோய்கள்" என்று பெயர். அவற்றிற்குக் காரணம் அவற்றின் கருக்களேயாம். நோய்க் கரு மிகவும் ஸூக்ஷ்மமான கிருமி அல்லது காளான். அது பலஹீனமான சரீரத்தில் அதிசீக்கிரமாக விருத்தியாகும்.

ஆனால் நமது சரீரம், நோய்க் கிருமிகளை அண்டவொட்டாமல் தடுத்து, அவற்றை எதிர்த்துக் கொல்லும்படியான விதமாக அமைக்கப்பட்டிருக்கின்றது. தேகத்தினுடைய தோல் கொஞ்சங்கூட காயமில்லாமல் சரியான ஸ்திதியில் இருக்கிறவரையில், அதுவே ஒரு தகுதியான கவசம். வாய், தீனிப்பை, குடல், மூக்கு, காது முதலிய இயற்கையான துவாரங்கள் வழியாகச்செல்லக் கூடிய நோய்க் கருக்களால், எக்காரணத்தினாலும் பலஹீனப்படாமல், சௌக்கியமான ஸ்திதியில் இருக்கும் சரீரத்துக்கு வாதை கிடையாது.

கடைசியாக அக் கருக்கள் சரீரத்துக்குள்ளே எங்ஙனமாவது சென்றுவிட்ட போதிலும் குறையில்லை. ஏனென்றால் அங்கே மிகவும் சுறுசுறுப்பான காவற்காரர்கள் அநேகர் இருக்கிறார்கள். அவர்கள் நோய்க் கிருமிகளை ஒழிப்பதில் வெகுசமர்த்தர்கள். அவர்கள் இரத்தத்தில் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஏதாவதொரு நோய்க்கிருமியைக் கண்டுவிட்டால், அவர்கள் அதனைச் சுற்றி இருந்துகொண்டு, கொஞ்சங் கொஞ்சமாக நெருங்கி அதனைச்சாப்பிட்டு விடுவார்கள். சுகவிதிக்கு விரோதமாக, தாறுமாறான நடையோடு ஒழுகுபவர்களின் சரீரம் இக்காரி

யத்திற்குப் பயன்படாது. சௌக்கியமான சரீரத்தில் தான், சௌக்கியமும், பலமுமான காவற்காரர்கள் இருக்கிறார்கள்.

மேலேசொன்ன விஷயங்களிலிருந்து, நமக்கு சௌக்கியம், இயற்கையான ஸ்திதியென்று நன்றாக விளங்குகிறது. நமக்கு ஏதாவது ஒரு நோய் வந்தால், அதைநாம் வலியக் கூவி அழைத்ததாக ஏற்படுகின்றது. ஆகையால் நமது இஷ்டத்தின்படி வியாதியோடு மிருக்கலாம், சௌக்கியமாகவும் இருக்கலாம். அதற்கு நமது நடையே காரணமாம்

சூரியன், மிகவும் பிரகாசமான வெளிச்சம், அடிக்கடி புதுப்பிக்கப்பட்ட காற்று இவை யெல்லாம் நோய்க்கருக்களின் கொடிய சத்துருக்கள். நமது வீடுகளில் சூரியனும், காற்றும் நன்றாக நடமாடவேண்டும் என்பதைத் திரும்பவும் சொல்லவேண்டுமோ?

நாகரீகமான தேசங்களிலே தற்காலத்தில் தொத்து நோய்களால், முன்காலத்தைப்போல, அவ்வளவு தொந்தரவில்லை. பதினென்காவது நூற்றாண்டில், ஐரோப்பாவில 10 கோடி ஜனங்களில் சுமார் காற்பங்கு அதாவது $2\frac{1}{2}$ கோடி ஜனங்கள் கொள்ளைநோயால் இறந்திருக்கிறார்கள். மிகவும் நாகரீகமான மேல்நாட்டிலோ வாந்திபேதி அபூர்வமாகிவிட்டது. நமது தேசத்திலும் அங்ஙனம செய்துவிடலாம்.

தொத்து நோய்களை ஒழிப்பதற்கு, அவற்றின் உற்பத்திஸ்தானங்களை முதலில் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். பிறகு அந்நோய்களால் பீடிக்கப்பட்டவர்களைத் தனிப்படுத்தி அவர்களுடைய உடுப்பு, படுக்கை முதலிய அவர்கள் உபயோகித்த வஸ்துக்களை எரித்துவிட்டு, அவர்கள்வசித்த இடங்கள் நோய்க்கிருமிகளை ஒழிப்பதற்கென்றே ஏற்பட்டிருக்கும் மருந்துகளைக் கொண்டு, சுத்தப்படுத்தவேண்டும் பொது நன்மையை உத்தேசித்து, நோயாளிகள் இக்காரியங்களுக்கு வருத்தமில்லாமல் உடன்படவேண்டும்.

ஸகல தொத்து நோய்களின் முகற்குறி ஜ்வரம், தேகம் உஷ்ணமாகும், தோல் வறட்சி அடையும், தாது தீவிரமாகவும், குழப்பமாகவும், சில சமயம் மிகவும் மந்தமாகவும் நடக்கும். எல்லாக் குடும்பங்களிலும் ஒரு "தேக உஷ்ணமாத்திரி" (உஷ்ணத்தை அளக்கும் கருவி) இருப்பது நன்றும். அதனால் தேக உஷ்ணத்தை உடனே தெரிந்துகொள்ளலாம். ஜ்வரம் கண்டஉடனே, வைத்தியரை வரவழைக்க வேண்டும்.

புதுவை 29 - 7 - 15 புரொபெசர், என். சுப்பிரமணிய அய்யர்.

குசேலோபாக்கியானம்.

(முன்தொடர்ச்சி).

மன்னர் மன்னவனே! இவ்வாறு குசேலமாமுனிவர் தம்மூர்ப் புறத்தை யடைந்தபோது அச்சிற்றூர் நலங்களெல்லாம் நிரம்பிய ஒரு பெரிய நகரமாய்விட்டது; அவ்வூரைச்சூழ்ந்துள்ள காடுகளெல்லாம் மாடமாளிகைகளாக விளங்கின. இவ்வாறானமையால் அச்சிற்றூர் தேவருலகம் மண்ணுலகின்கண் வந்து தங்கியது போல விளங்கியது. தேவர்கள் இந்நகரத்தைப் பார்த்து இது நமது நகரத்திற்கு மாறாக விசுவாமித்திர சிருட்டிபோலஎம்முனிவரால் சிருஷ்டிக்கப்பட்ட தேவர் நகரமோ வென்று மயங்குவாராயினர். மேலும் அந்நகரம் முருகக் கடவுள் சூரபதுமன் முதலிய அசுரர்களை வென்று தேவர்களைக் குடியேற்றிய நாளில் விளங்கிய சுவர்க்கலோகத்தை யொத்தும் விளங்கியது. இன்னும் அந்நகரம், குபேரனது நகரம் இதனை நோக்கின் சிற்றூர் போல்வதாமென்று கூறுதற்குரியதாகவும் விளங்கியது.

மேகமண்டலத்தை யளாவியமதிலும், ஆழ்ந்தகன்றுநீர்நிறைந்துள்ள அகழியும், யானைகளின் ஆர்ப்பும், குதிரைகளின் முழக்கும், தேர்களின் ஓதையும், காலாட்களின் ஆரவாரமும், இளமங்கையரின் ஆபரண ஒலியும், வித்தியாசாலைகளும், நடனசாலைகளும், அறச்சாலைகளும், யானை குதிரை தேர் என்பன இடைவிடாது செலலும் வீதிகளும், காலாட்கள் கம்பீரமாகச் செல்லும் வீதிகளும், திருவிழா, திருமண முதலிய மங்கலப்பொலிவுநிறைந்துள்ளமாடமாளிகைகளுமுடையதாக விளங்குகின்ற தம்முடைய வூரைக் குசேலமாமுனிவர் நோக்கி, கண்ணபிரானது திருவருளால் இன்னும் யாம் பார்ப்பதற்குரியன பலவுளவென்றுகருதிச்சென்று அந்நகரத்தின் மதில் வாயிலை யடைந்தனர். அவர் அரசர் முதலாயினோர் தம்மைச் சூழ்ந்து வர வந்தவுடன், அந்நகரத்தில் வசிப்பவர்கள் பேருவகையடைந்து, காணிக்கைகளோடும், சாமரம், நிறைகுடம், கண்ணாடி, தோண்டி, முரசு, விளக்கு, கொடி, இணைக்கயலென்னும் அட்டமங்கலத்தோடும், பல்வகை வாத்தியங்கள் முழங்க விரைவாக அவரை யெதிர்கொண்டழைக்க வந்தார்கள்; அவ்வாறு வந்தவர்கள் யாம் வாழ்ந்தனம் வாழ்ந்தனமென்று கூறி, அகமும் முகமும் மலர அவரது திருவடிகளில் தண்டம் போல

விழுந்து வணங்கி யெழுந்து நின்று தேர் மீதேறி வந்த அம் முனிவர்பிரானைச் சிவிகைமீ தேற்றிப் பொன்மயமான குடைகளை யிருபுறமும் பிடித்துக்கொண்டு, பலவகை வாத்தியங்கள் முழங்கவும், சிலர் சாமரம் வீசவும், யானை குதிரை தேர் காலாளென்னும் சதுரங்க சேனை சூழவும் மறையவர்கள் மங்கலப் பாடல்களைப் பாடவும் அழைத்துச் சென்றனர். இம்முனிவர் பிரான் இவ்வாறு செல்லும் போது இவர் செல்லும் வீதியின் இருபுறத்துமுள்ள மாளிகைகளிலுள்ள பெண்கள் இவரைத் தரிசிக்குமாறு தமது மாளிகைகளின் பலகணிகளில் தம் முகங்களை வைத்துக் குசேலரை அன்போடு தரிசித்து, இந்தப் பிராமணன் இப்போது பெருஞ்சிறப்பினையடைந்து வருகின்றான்; இவன் செய்த புண்ணிய மெத்தன்மையதோ வென்று தம்முள் பலவாறு பேசுவாராயினர்.

அவர்களுள் சிலர் கிள்ளி யெடுத்தற்குஞ் சதையில்லாதுள்ள தன்னுடம்பின் மீது கிழிந்த பழுங்கந்தைத் துணியை யெப்போதுங் கட்டிக்கொண்டு திரிந்த இப்பிராமணன் அழகால்மன்மதனைப் பழிக்கும் உடம்புடையவனாய் வந்தனன்; இக்கோலத்தைப் பாருங்கள் என்றும், சிலர் பலர் தாம் செல்வமடையுமாறு காடு மலைக் குகை முதலிய விடங்களில் வசித்து, கந்த மூலங்களையுண்டு, குடும்ப சம்பந்தமில்லாது தவஞ் செய்கின்றனர்; இம்மறையவன் அவ்வாறு தவஞ்செய்யாது பெற்றபயனை யாவர் பெற்றனரென்றும், சிலர் வேதமானது எஞ்ஞான்றும் அறமானது அபிவிருத்தியாகக் கடவது என்றறைகின்றதன்றோ? இந்தப் பிராமணன் வெகுகாலமாகப் பேறத்தைப் பேரன்போடு செய்துவந்தனன்; அதனது விருத்தியால் இப்போது இப்பெருஞ் செல்வத்தை யடைந்தனன்; இன்னு மெப்பெருஞ்செல்வத்தை யடைவானோ? என்றும், சிலர் வேதமானது பிராணிகள் மீது கருணைசெய்து வருகின்றவர்கள் தேவரினும் உயர்ந்தோராவரென்று கூறுகின்றதன்றோ? இக்குசேலமா முனிவரிடத்துள்ள கருணைக்குப் பயன் இம் மண்ணுலக செல்வமே யாமோ? இன்னும் வேறு செல்வமுண்டாமென்றும், சிலர் மனம் வாக்குக் காயமென்னுந் திரிகரணங்களையும் கண்ணபிரானது திருவடிக்கண் செலுத்தி, நன்னெறியிலொழுகும் இப்பிராமணனுக்கு இது தானோ செல்வமாவது; இன்னும் சொல்லுதற்கரிய செல்வமிருக்கின்றதென்றும், சிலர் கண்ணபிரா

னது கருணைக்கண் சென்றவழியே திருமகள் செல்வாளென்பது
திண்ணமன்றோ ? இப்பிராமணன் மீது கண்ணபிரானது கருணை
க்கண்ணோக்கம் மிகுதியாயிருக்கின்றது; அதுமிகுதியாயிருக்கின்ற
தென்பதற்கேற்றவாறே இவனிடத்துத் திருமகளும் வந்திருக்கின்
றாள் என்றும், சிலர் ஒருவர் பெருங்காட்டிலும், பெருமலைக் குகை
யிலும் வசித்துப் பெருந்தவங்களைச் செய்து, அவற்றாலுயர்ந்
திருக்கின்றவராயிருப்பினும் அவர், தமக்குமண்ணாளும் அரசச்செல்
வம் வருமாயின், அதனை விரும்பாது நீக்கிவிடுவரோ? ஒருவரு
மிலரேஎன்றும், சிலர் ஒருவர்யானெனதென்னு மிருவகைப்பற்றுக்
களையுமொழித்திருப்பாராயினும்கடவுள் தமது நல்வினை தீவினைக்
கேற்குமாறு தரும் நன்மை தீமை யென்பன இமை கொட்டுமள
வேயிருப்பினும், எக்காலத்திலுமிருப்பினும், அவர் அவற்றைநீக்கு
தற்குரியராவரோ? அவற்றுள் எதனையும் நீக்குதல் முடியாது என்
றும், சிலர் நம்மனோரது பாக்கியம் போன்றுள்ள இவ்வந்தணன்
தன்மனைவியாகிய சுசீலைபலமுறை வேண்டிக்கொண்டதற்கிணங்கிக்
கண்ணபிரானிடத்துச் சென்று, தனக்கியன்ற பொருளை அவர்க்கு
அன்போடு சமர்ப்பித்து, அவரைத் தரிசனஞ்செய்து, சிவிகை,
விருது, கொடி, குடை முதலிய வரிசைகளையும் பெருஞ்செல்வத்
தையும் அவரிடத்திற்பெற்று இவ்வாறிங்குவந்தனனென்றும், சிலர்
நங்கைமீர்? பெரியோர் செல்வம் நல்குரவு என்னுமிரண்டனுள்
எதனை யடைந்தாலும் தமது சற்குணத்தினின்றும் பிறழ்வதி
லர்; அவர் மன்னர் மன்னராகிய சனகர் தாம் அரசாட்சி செய்த
போது தமதொருபாதத்தைச் சந்தனக் குழம்பு நிறைந்துள்ள
கிண்ணத்தின் மீதும், மற்றொரு பாதத்தை நெருப்புநிறைந்துள்ள
கிண்ணத்தின் மீதும் வைத்து, அவற்றால் வரும் சுக துக்கங்
களைச் சமமாகப் பாவித்தொழுகின்றபோல ஒழுகுவர்; சிறிதாக
வேனும் உலகவாழ்க்கையில் மயக்கமடையார் என்றும், சிலர் இரு
வகைப் பற்றையுமொழித்த இவ்வருந்தவனுக்கு இப்பெருஞ்செல்
வமும், பெண்கள் நேசமுமிருப்பது நன்றாமோ என்றும், சிலர்
முன்னாச் சிவநமுனிவனென்பவன் இளமைப் பருவம் கிடைக்கப்
பெற்று, பெண்களோடு கூடிப்போகத்தை வெகுகாலம் அனுபவித்
திருந்தானல்லவோ என்றும் கூறினார்கள்.

சிவநமுனிவர் கதை.

இவ்வாறு சுகமுனிவர் திருவாய்மலர்ந்தருளியபோது, பரிச்சித்து மகா ராஜனெழுந்து, அவரது பாதகமலங்களை வணங்கி, சிவநமுனிவ ரென்பவர் யார்? அவரெவ்வாறு இளமைப் பருவத்தை யடைந்தனர்? அவர் பெண்ணை மணஞ்செய்துகொண்டது எவ்வாறு? இவற்றை யெல்லாம் அடியேனுக்கு விரிவாகக் கூறியருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தனன். பரிச்சித்து வேந்தன் வினயவற்றைக் கேட்ட சுகமுனிவர் அவ்வரசனைநோக்கி அரசரேறே! அவர் கதையைக் கூறுகின்றேன். நீகேட்கக் கடவாயாக; முற்காலத்தில் பிருகு மகாரிஷியின் செல்வப் புத்திரரான சிவநமுனிவரென்பவர் இமயமலையிலுள்ள ஒரு பூங்காவனத்திற்றங்கி, தமதிருப்பினின்று மெழுந்திராது வெகுகாலந் தவஞ்செய்துவந்தனர்; அவரது உடம்பைப் புற்று மூடிக்கொண்டது; அப்புற்றின் மீது முல்லை முதலிய கொடிகள் படர்ந்து அரும்பீன்று பூத்து நிறைந்திருந்தன. இவ்வாறாக அவர் தவஞ்செய்கிற காலத்தில் சையாதி யென்னும் பெயருள்ள ஒரு பேரரசன் புத்திரியாகியசுகந்நி யென்பவள் தன்தோழியருடன் பூப்பறிக்கும் பொருட்டுஅப்பூங்காவனத்திற்கு வந்து,பூப்பறிக்கும் போது, அங்கு முல்லைக்கொடிகள் வெள்ளெனப் பூத்து மிகுதியாகப் படர்ந்துள்ள ஒரு புற்று உயர்ந்து விளங்குவதைக் கண்டு, உவப்போடு அப்புற்றருகேவந்து இப்புற்றுள்ளே யிருப்பது யாது? அதனைப் பார்ப்போமென்று அப்புற்றின் சந்துவழியாக நோக்கினாள். அவ்வாறு நோக்கிய அந்நங்கை சந்து வழியில் அவரது சிவந்த கண் தோன்றுவதைக் கண்டொன்றுணராது ஆச்சரியமடைந்து, இஃதொரு பொன் வண்டாயிருக்கலாமென்றெண்ணி, ஒரு சிறுதுரும்பையெடுத்து, அக்கண்ணினுள் செலுத்திச் சுழற்றி, அதனைத் தோண்டுவாளானாள். அதனால் அம்முனிவர் பிரான் தவநிலை மாறி யாம் செய்யும் தவயோக வொழுக்கம் நிலைகுலையுமாறு இப்புற்றருகேவந்து, இவ்வாறு செய்தவர் யார்? அவரையாம் பார்ப்போமென்றுபார்த்தபோது, சுகந்நியைக் கண்டு, இவள் இலக்குமியோ? இந்திராணியோ? இரதியோ? என்று கருதிக் காமவலையிற் சிக்கிக் கலங்கஅதனைச் சகித்தற்கியலாது, தம்மை மூடியிருந்த புற்றானது சிதைந்து விழுமாறு கையைநீட்டி, அந்தையலின் கரத்தைப் பிடித்தனர். சுகந்நி, தனது கரத்தை அம்முனிவர்பிடித்த வளவில் அஞ்சிப்

பதைத்து நடுங்கித் தன்கரத்தை யுதறிப்பதறிக்கொண்டுகாற்சிலம்பும்கைவளையும் கலகலவென்றுசப்திக்கவிரைந்தோடித் தன் பாங்கியாருகே சென்று விழுந்தனள். அப்பாங்கியர்கள் சுகந்தி வாய்புலர்ந்து,கண்செருகி மயங்கி விழுந்திருத்தலை நோக்கி, இவள் இப்பெருங் காட்டில்எதனையோ கண்டு பயந்தாளென்று கருதி,விசிறிகொண்டு உடம்பிற் படிந்துள்ள புழுதியைத் துடைத்து, உபசாரஞ்செய்யவே, அவள் தெளிவடைந்து துயர் நீங்கினுள். இவ்வாறுயசமயத்தில் சையாதியென்னுமன்னன் குதிரை மீதேறி, தனதுநாலாயிர மனைவியரும் தன்னைச் சூழ்ந்துவர; அப்பூங்காவனத்தின்விநோதங்களைப் பார்த்தற்பொருட்டு அங்கு வந்திறங்கி, அப்பூங்காவனத்தினழகைச் சந்தோஷமாகப் பார்த்துக்கொண்டு வந்துபுற்றிலிருந்து வெளியே வந்து நிற்கின்றசிவந முனிவரைக்கண்டு,அவரைத்துதிசெய்து வணங்கி எழுந்து நின்று அவருருவமுற்றும் நோக்கி, இவர் கண்ணினின்று நீர்வழியுமாறு செய்தவர்யாவரென்று கோபித்து, அவரை அந்தப்பூங்காவனமுற்றுந் தேடிவந்து, பாங்கியர்கள் சூழவிருந்த தனது குமாரத்தியைப் பார்த்து,புற்றிலிருந்து பெருந்தவஞ்செய்து வந்த முனிவர் பிரானுக்குத்தீமை உங்களுள் எவா செய்தனரென்று கேட்டனன். அதற்குப்பாங்கியர்கள் நாங்கள் அம்முனிவர்க்கு ஒரு தீங்குஞ் செய்திலோமென்று கூறினர்; சுகந்தியோ தன் தந்தையின் பாதத்தை யன்புற வணங்கி, நிகழ்ந்தனவற்றை யெல்லாங்கூறினுள். சையாதி மன்னன் தன் மகள் கூறியவார்த்தைகளைக் கேட்டு மனமிரங்கி, பேதைப் பெண்ணே;என்ன காரியஞ் செய்தாயென்றிகழ்ந்துபேசி, அம்முனிவரிருக்குமிடத்திற்கு விரைந்துசென்று, அம்முனிவரது பாதங்களைவணங்கி, அடியேன் மகள் செய்த இவ்விழிதொழிலைத் தாங்கள் பொறுத்தருளல் வேண்டுமென்று கூறிப்பிரார்த்தித்தனன். முனிவரோ அரசனே! உன் செய்கை நன்றாயிருக்கின்றது; இப்பொழுதே வுன் புத்திரியை எனக்கு மணஞ்செய்துகொடுப்பாயாயின்,உன்புத்திரிசெய்தபிழையைப்பொறுத்துக்கொள்வேன்; கொடாதொழிவாயாயின், உன் குலமுழுதுமநாசமாம்படிசபிப்பேனென்று கூறினர். சையாதி மன்னனே சிவநமுனிவர்க்குத் தன் புத்திரியாய சுகந்தியைக்கொடுக்க வுடன்பட்டு,அவர்க்குவேத விதிப்படி தன் மகளை விவாகஞ்செய்து கொடுத்தனன்.சிவநமுனிவர் கற்பிற்கசிரயாகிய சுகந்தியென்னும் தமது மனைவி

யோடு கூடி இன்பமாக வாழ்ந்து வருங்காலத்தில், ஒரு நாள் சிவந முனிவர் வாழும் பூங்காவனத்தின்கண் அசுவினி தேவர்கள் வந்து தம் மெதிரேயிருந்த சுகந்நியின் திருவழகைக் கண்டு மயங்கிக் காம நோய்க்கிலக்காய் வருத்தமுற்று, அவ்வம்மையாரை நோக்கிக் கற்பகவிருட்சத்தின் மீது வல்லிக்கொடிபோலும், மதிக்கொழுந்து (சந்திரப்பிரபை)போலும், செங்கரும்பு போலும், பசுங்கிளிபோலும் விளங்கும் பாக்கியவதி! உன்னைப்பெற்ற தந்தையார்? உன்னுடைய பெயரென்ன? அவற்றை நீசொல்லக் கடவாய்; யாங்கள் தேவவைத்திய ரென்னும் அசுவினி தேவர்கள்; காமநோ யொழியுமாறு எங்களை நீ யாண்டருளவேண்டுமென்று யாசித்தனர். இவர்களிவ்வாறு கூறுவதைக் கேட்ட சுகந்நி அவர்களை நோக்காது தமது காலடியை நோக்கி என்னுடையபெயர் சுகந்நியென்பதாம். யான்சிவந முனிவரது மனையாளாவள்; நீங்கள் கொண்ட எண்ணம் நிறைவேறாது; நீங்கள் இவ்வாறு நினைந்ததனால் பெறுவது யாது? ஒன்றுமின்றாம்; போங்கள் போங்களென்றெடுத் தெறிந்துபேசினார். அவ்வசுவினிதேவர்கள் அச்சுகந்நி தம்மை யெடுத்தெறிந்து பேசினமையைக் கேட்டுப் பெருந்துன்பமுற்று, சுகந்நியைநோக்கி நங்காய்! பேரழகுபொருந்தியுள்ள எமது தேவபோகம் உனக்குச் சுகந்தருவதுபோலநரையும் திரையும் பொருந்தியுள்ள துறவியின் போகம் சுகந்தருவதாமோ? மலர்கள் நிரம்பியுள்ள இந்தத தடாகத்தில் உன் கணவனும் யாங்களும்மூழ்கினால், அழகும்இளமையும் வாய்ந்தவராய் விளங்குவோம்; அம்மூன்றுருவங்களுள் யாதுனக்குப் பிரியமாயிருக்கின்றதோ அதனை நீ தழுவக் கடவாயென்று கூறினர். அசுவினிதேவர்கள் கூறிய அவ்வார்த்தைகளுக்குச் சுகந்நி மறுமொழி கூறாது, தமது கணவரிடத்துச் சென்று நிகழ்ந்தனவற்றைக்கூறினர். சிவந முனிவர் தம்மனைவியார் கூறியதைக் கேட்டு நரையும் திரையும் மூப்புமாகிய விவற்றாலே யுண்டாகின்ற துன்பமொழியும்படி, இளமைப் பருவத்தை யடைதல் நல்லகாரியமாமென்றாலோசித்து, சுகந்நியின் முகத்தை நோக்கி, நீ அசுவினி தேவர்கள் கூறியதற்குடம்படக்கடவா யென்று கூறி, அவ்வம்மையாரை முன்னே யனுப்பித்தாம் பின்னேசென்று அவ்வசுவினி தேவர்களுடன் அத்தடாகத்தில் மூழ்கினார். மூழ்கிய அம்மூவரும் இளமைப்பருவமும் பேரழகு முடையவராய் வெளியே வந்தார்கள். மங்கையர்க்கரசியாக விளங்கும்சுகந்நியார் சூரியோதயம் போல விளங்குகின்ற

அம்மூவுருவங்களைக்கண்டு, வேற்றுமை தெரியாது சிறிதுமயங்கி என்கற்புக்குப்பழுதுவராதிருக்கவேண்டுமென்று கடவுளைத் தியானித்து, தமதுநாயகராகிய சிவநமுனிவரைவிரைந்துசென்றுதழுவி மகிழ்வுற்றனர். அப்போது முனிவர் பிரானாகிய சிவநர் பேரின்புற்று, மனம் நாண முகம்வாடி வருத்தத்தோடிருக்கும் அசுவினி தேவர்களை நோக்கி, அறிஞரே! நீவிர் யானிளமைப் பருவமடையுமாறு செய்த வுபகாரத்தை யொருபோது மறவேனென்று கூறிப்பின், வேண்டியவற்றை வேண்டியவாறு தரும் வேள்வி யொன்றனைச்செய்து, அவிர்ப்பாகத்தை அவ்வசுவினி தேவர்களுக்குங்கொடுத்தனர். அதனால் அவர்கள் பெருங்களிப்படைந்து சென்றனர்; பின் அம்முனிவர் சுகந்நியுடன் அன்புமிக்குக் கூடி யின்புக்கு வாழ்ந்திருந்தார். இதுதான் அவரது வரலாறுமென்றுகூறி, மற்றக்கதையைக் கூறுவாரானார்.

இந்திரனது ஊர்க்கோலவிழாவும் நாணமுறுமாறு பெருஞ்சிறப்போடுசிவிகைமீதேறி, அங்குள்ளார் பலரும் ஆநந்தமடையச் சென்று தமது மனைவாயிலையடைந்து, சிவிகையினின் றிறங்கி, தமது குடிசைவீடு ராஜக்கிருகம் போல இரத்தின கசிதமாக விளங்குதலைப் பார்த்தனர். அப்போது அவர் தம் மனைவியாராகிய சுசீலையம்மையார் செம்பட்டாடையுடுத்தி, அணிதற்குரிய ஆபாணங்களை யெல்லாம் நிறையவணிந்து பாங்கியர் பலர் கவரி, நிறைகுடம், தீபம், கண்ணாடி முதலிய அட்டமங்கலங்களை யேந்தித் தம்மைச் சூழ்ந்து வர, தம் கொழுநரை யெதிர்கொண்டழைக்குமாறு வந்து அவரை வந்தனைசெய்து உள்ளே யழைத்துச்சென்று, ஒரு பொற் பலகைமீது நிற்கச்செய்து அவரது திருவடிகளைப் பாங்கியர் செம்பொன்னாற் செய்து மாணிக்க மிழைத்துள்ள கரகத்திலுள்ள தண்ணீரைவார்க்கத் தமது காங்களால் அன்போடு சுத்திசெய்து, வெண்பட்டாடையாற் றுடைத்து அவ்வடிகள்மீது பரிமளவர்க்கங்களைப் பூசி, பூமாலை சாத்தி, அவற்றிற்குத் தூப தீபங்காட்டினர்.

(வரும்.)

கல்வி ஒரு சம்பாஷணை.

(முன்தொடர்ச்சி).

மானிடப்பிறவிக்கு இன்றியமையாத ஸச்சித்பிரகாசம், சிதானந்தப் பிரகாசம், சச்சிதானந்தப் பிரகாச மென்னும் மூன்றும்

முறையே முன்மூளை (Cerebrun), பின்மூளை (Cerebellum), அடிமூளை (Medullaoblongat) என்னும் மூன்று மூளைகளிளமைப்பட் டிருக்கின்றன. அபரவித்தையாகிய சச்சித்சிதானந்தமென்னு மிருபிரகாசங்களும் மானிடத்தன்மைக்கும் விலங்கினத்திற்கும் பொதுவாகையால் இவ்விரண்டில் மட்டும் பிரவிர்த்தியுடையமனிதனுக்குவிலங்கினத்தைவிடச்சிறப்புத்தன்மை சித்திக்கிறதில்லை. ஆனல் பரவித்தையாகிற சச்சிதானந்தப் பிரகாசமே மற்ற மூன்று பகுதிகளை விட மானிடத்தன்மைக்குச் சிறப்பாகவிருத்தலால் பரவித்தையில்பிரவிர்த்திபுடைய மானிடரைப்பொதுவாக விசேஷ புத்திபுடையவர்கள்எனக் கூறுவார்கள் அடிமூளையிலிருக்கும் சச்சிதானந்தப் பிரகாசத்தில் எந்த மானிடன் பிரவிர்த்திக்கின்றானே அவனே விசேஷ புத்தியை உடையவன். முன்மூளையே யாவற்றினும் பெரியது. இந்த மூளையிலேயே சகல யோஜனைகளும் கிரியைகளும் நடக்கின்றன. மற்ற இரண்டுமூளையின் சக்தியைக் காட்டிலும் இதன் சக்தி குறைவே. இது ஒவ்வொரு வஸ்துவையும் உற்றுணர்ந்து கடைசியாக நிதானித்த முடிவை இரண்டாவது மூளையாகிய பின் மூளையில் அடக்கி வைக்கின்றது. நாம் தூங்கும்போதும் ஸ்வப்னம் காணும்போதும் நமது புறமனம் அடங்கிவிட அதன் ஜீவசக்தி கீழிறங்கி இரண்டாவது மூளையாகிய பின் மூளையில் செல்லுகின்றது. நாம் ஸ்வப்னம்முதலியவை காணும்பொழுது உள் மனது இதில் வேலைசெய்கின்றது. மூன்றாவது மூளையாகிய அடிமூளை ஒரு கொட்டைப்பாக்குப் பரிமாணமுள்ளது. ஆனல் இம்மூளையின் தொழில் மிகவும் அற்புதம். இதில் தான் ஸச்சிதானந்தப் பிரகாசம் விருத்தியடைகின்றது. குழந்தாய்! இப்படியே அதன் தத்துவத்தைக் கூறவேணுகில் விரியுமானதால் பிரிகிருதமான கல்வியைப் பற்றி இன்னுஞ் சிறிது கூறுகின்றேன். ஔவையும், "ஓதுவதொழியேல்" எனக்கூறினர். நூற்களை வாசிப்பதை நீ எப்பொழுதும் நீக்காதே யென்பது பொருள். "தொட்டனைத்தூறுமணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறுமறிவு" என்று திருவள்ளுவரும் கூறியுள்ளார்.

ஆங்கிலேயத் தத்துவ சாஸ்திரியாகிய பேகன் என்பவரும் கல்வி ஒருவனைப் பூர்த்தியாக்கு மென்று கூறுகிறார்; மநுஸ்மிருதியிலும் எவன் தினந்தோறும் தன் சக்திக்குத் தக்கபடி வேதத்தில் நான்கு வாக்கியமாயினு மோதுகின்றானே அவன் பாதாதி

தேசம் வரையில்தவஞ்செய்கிறவனுகச் சொல்லப்படுவான் என்றுர் மநு. அன்றியும் மற்மேறிடத்து ஒளவை "நூற்பலகல்" எனக்கூறியுள்ளார். ஆதலால் பழைமையான நூற்களை அவசியம் கற்றல்வேண்டும். தன் துன்பத்தை நீக்கும் பொருளைக் கொடுத்தாகிலும் கற்கவேண்டும். கற்ருல் ஞானமுண்டாகும்; உண்டாயின் துன்பத்தை நீக்கி வீடுபெறலாம். கல்வியே பொருளன்றி மற்றவை பொருளாகமாட்டா. இது அனைத்தையும் அளிக்கும். இதுபற்றியேபெரியோர்கள்,

கைப்பொருள் கொடுத்துங் கற்றல் கற்றபின் கண்ணுமாகும்
மெய்ப்பொருள் விளக்கு நெஞ்சின் மெலிவிற்கோர் துணையுமாகும்
பொய்ப்பொருள் பிறகற் பொன்னும் புகழுமாந் துணைவி யாக்கு
மிப்பொரு ளெய்தி நின்றீரி ரங்குவ தென்னை யென்ருன்.

தெள்ளமுத மனையகல் விப்பொருள் படைத்திடிற்
றேசமெல் லாந்துதிக்கும்
ஜெயஸ்தம்ப மானபுகழ் நிலைநிற்கு மிவையெலாஞ்
செம்பொன்மிகு செல்வமதுபோல்
வெள்ளமது கொளுமெனு ம் பயமில்லை கனவினுல்
வெம்பவரு கலனுமில்லை
வேந்தர் பறித்திடக் கூடாது சோதரர்
விரும்பினும் பங்குருது
கள்ளனுல் திருடவும் முடியாது வரவரக்
கனமலாற் குறைவுருது
கருணைஞா னந்தழையு மாகையா லுனையிதப்
கமலத்தில் வைப்பதெளிதாம்.

என்று கூறியிருக்கிருர்கள். முற்காலத்தில் புலவர்கள் எங்கெங்கு உபன்னியஸிக்க விரும்புவார்களோ அங்கங்குத் தடையின்றி உபன்னியசிக்க வல்லவர்களாயிருந்தனர். இக்காலத்திலோ புஸ்தகங்களையே பெரிதும் நம்பி உபன்னியஸிக்கின்றனர். அந்தோ! காலவேற்றுமையை என்னென்றுரைப்பேன். காலவேற்றுமையைப்பற்றி முன் ஒரு புலவர் கூறியுள்ளதை உனக்கு நினைப்பூட்டுகிறேன்.

அதிகாலை யிலெழுந்து அதிசுசியாய் நீராடி
ஆவனுடன் ஸந்திஜபம் ஆசரித்த தக்காலம். (1)

அதிநேரஞ் சென்றெழுந்து அங்கிருந்த வீட்டாரை
ஆயிற்று காபியென்று ஆர்ப்பரிப்ப திக்காலம். (2)

ஆதித்ய வந்தனமும் ஆராதனாதிகளும்
இன்பமுடன் பூஜைகளும் இயற்றிவந்த தக்காலம். (3)

ஆதியிலே லெம்னட் ஆனவுடன் சோடாவும்
இன்னும் ஒயின்பருகி இடர்படுவ திக்காலம். (4)

இன்னமுது தானமுடன் இனியவக்னி ஹோத்திரமும்
ஈசனரு ளால்ஸுகிருதம் ஈட்டிவந்த தக்காலம். (5)

இன்பரவா தோசையுப்மா இட்டலீடீ பானமதும்
ஈனக் கொலைகளவும் ஈட்டிநிற்ப திக்காலம் (6)

ஈவு இரக்கமதால் ஈசுவரனைத் தான்பணிந்து
உத்தமமாய்க் கீர்த்தி யுடன்ஜ்வலித்த தக்காலம். (7)

ஈயத்தை வெள்ளியென்றும் ஈசுவரனை இல்லையென்றும்
உண்டுடுத்தி யிறப்பதையே உண்மையென்ப திக்காலம். (8)

உள்ளே களங்கமின்றி உத்தமனை நன்குணர்ந்து
ஊணற்று ஓதிநலம் ஊட்டிவந்த தக்காலம். (9)

உற்றபொருள் நோக்காமல் உள்ளவரை கட்குடித்து
ஊணருந்திக் கற்பழித்து ஊன்வளர்ப்ப திக்காலம். (10)

ஊரார்தஞ் சேய்தனை ஊட்டி வளர்ப்பதுவே
எல்லோர் கடமையென்று எண்ணிவந்த தக்காலம். (11)

ஊரிலுள்ள வர்களெல்லாம் ஊரைவிட் டோடிவிட்டால்
எம்போவி யர்க்குநலம் என்றுரைப்ப திக்காலம் (12)

என்புருகி நீர்சோர எம்பெருமான் றன்னருளை
ஏகமன தால்மகிழ்ந்து ஏற்றியது மக்காலம் (13)

எப்பொழுதுஞ் சூதாடி எவ்வளவோ வக்ரமங்கள்
ஏதுசெய்ய லாமென்று ஏங்குவது மிக்காலம். (14)

ஏகா க்ஷரப்பொருளை ஏற்றித் தொழுதெமது
ஐயனருள் வானென்று ஐயமற்ற தக்காலம். (15)

ஏரா ள மானபொருள் ஏவல் முதலிருந்தும்
ஐயமென்று வந்தவர்க்கு ஐயமிடா ரிக்காலம். (16)

ஐம்பொறி களையடக்கி ஐய னருள்பெறவே
ஒற்றுழைத்து எந்நாளும் ஒப்பற்ற தக்காலம். (17)

ஐம்பெறியு மோர்பொழுதில் ஐந்து தொழிலியற்ற
ஒன்றெண்ணி யொன்றுரைத்து ஒழிவதுவே யிக்காலம். (18)
ஒருவர் பசியென்று ஒருவார்த்தை கூறுமுனம்
ஓடிவந்து உபசரித்து ஓதனமிட்ட தக்காலம். (19)
ஒருமனிதர் தாகமென்று ஒருவார்த்தை கேட்டிடிலோ
ஓங்கியடித் தேவெளியே யோட்டுவது மிக்காலம். (20)
ஓதரிய நூற்பலவும் ஓர்ந்தபல பண்டிதர்க்கு
ஔஷதமாய் நின்றதுவும் ஔவைமொழி யக்காலம். (21)
ஓயா மனக்கவலை ஓர்புறத்தி லேயிழுக்க
ஔஷதமாய் நிற்பதுவும் ஔவியமே யிக்காலம். (22)
அக்காலம் நீங்கிக்கெட் டிக்காலம் வந்ததுபோல்
துர்க்காலம் நீங்கியினி நற்காலம் வந்திடுமே. (23)

மேற்கூறிய கண்ணிகளால் அக்காலத்திற்கு மிக்காலத்திற்குமுள்ள வேற்றுமை தெள்ளென விளங்கும்.

ஆனந்த சாகரன்:—என் சற்குருவே! தாங்கள் இதுகாறும் உபதேசித்ததற்கு யானென்ன கைம்மாறுசெய்யப் போகிறேன். இப்பொழுதே நான் படிக்கவேண்டுமா? அல்லது சிறிது காலஞ் சென்று படிக்கலாமா? என்பதையும் படித்து, தேசத்திற்கு நன்மை செய்தவர்யாவர் என்பதையும் நான் எப்படி நடக்கவேண்டு மென்பதையும் விளக்கிச்சொல்ல வேண்டுகிறேன்.

சர்வகலாநிதி:—நான்சொல்வதை ஆவலுடன் கேட்டு அதன்படி ஆசரிக்கும் அருமைச்சிஷ்யா! சொல்லுகிறேன், கேள். "இளமையிற்கல்" என்றுஔவை கூறியதைமறந்துவிட்டாய். யாதொரு கவலையுமற்ற இளமைப்பருவமே கல்விகற்க ஏற்றகாலம். இதுதப்பினால் பின்பு குடும்பக்கவலை மேலிட்டுக் கல்விகற்க அவகாசமில்லாது போவதுமன்றி மனதிற்கு நன்றாய்ப்பதிய மாட்டாது. இளம் பருவத்தில் கல்விகற்காவிடின் பின்பு இன்னல்களடைய நேரிடுமென்பது பிரத்தியட்சம். இவ்விஷயத்தில் மிஸ்டர் சங்கரநாயர் சொல்வது யாதெனில் நீங்கள் பிள்ளைகளில் ஒவ்வொருவரையும் பள்ளிக்கூடத்திற்குச் செல்லும்படி கட்டாயப்படுத்த வேண்டும்; உலகத்திலுள்ள பாஷைகளில் ஒன்றையாவது கற்றுப் பாஷா சாமர்த்தியத்தைப் பெறாவிடினும் தொழிலுக்கு வேண்டியவற்றையாவது படிப்பிக்க வேண்டுமென்பதை நீங்கள் கருத்தில

வைக்க வேண்டுமென்பதேயாம். தாதாபாய் நௌரோஜி, பால கங்காதர திலகர், சுரேந்திரநாத் பானர்ஜி, லஜபதிராய், பிபின்சந்திர பாலர், கோபாலகிருஷ்ண கோகலே, ஜி. சுப்பிரமணிய ஐயர் முதலியவர் நன்ருய்க்கற்றுத் தேசத்திற்கு நன்மை தேடிவருகின்றனர். நீகற்றமட்டும் நன்ருய் உற்றுணர்ந்து கசடறக் கற்கவேண்டும். கல்விகற்பதால் நேரும் இன்னல்களையும் நோக்கக் கூடாது. சோம்பித்திரியக்கூடாது. இதுபற்றியே பெரியோர்

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணுயி ஞர்" என்றுகூறினர்.

அறிவின்பயன் யாதெனில் அது பின்வருமாறு:—
"கருத்தடங்கின் முத்தியது கையகலின் காட்டாகும்
விரித்தபொரு ளிதுவென்ன அறிவுடைய மேதக்கோர்
திரித்தற்கு நல்லறிவால் சித்தத்தைத் திறம்பாமல்
அரித்தியுடல் நிலைநிறுத்தும் அதுஅறிவின் பயனுமால்."

ஆதலின் நீதவருது எஞ்ஞான்றுங் கற்றல்வேண்டும்.

ஆனந்த ஸாகரன்:— என்குருவே, அடியேன் நமஸ்கரிக்கின்றேன்.

முச்சுடராயுரைக்க வந்த முற்பொருளே
யச்சுடரா யாடவந்த வறம்பொருளே
தற்சுடராய்த் தழைத்துவந்த தவப்பொருளே
பொற்சுடராய்ப் பூததுநின்ற புவிப்பொருளே (1)
விட்டுவிட் டேனினி மேதினி யின்பத்தை
கட்டிவிட் டேனினி கலைமகட் பாதத்தை
தொட்டுவிட் டேனே மென்னும் பொருளைப்
பற்றிவிட் டேன்பரத்துலகுசிறு பாகததையே. (2)

சர்வகலாநிதி குழந்தாய்! குசலமுண்டாகட்டும்.

(இருவரும் செல்கின்றனர்.)

Pandit M. M. Narayanasamy Aiyer,
Madikandan,

புகையிலையினால் வருங்கேடு.

நம்மவர்களைப் புகையிலை எவ்வாறு கெடுக்கின்றது?

(முன்தொடர்ச்சி)

சிலசமயங்களில் நேத்திர நரம்புகளில் மேற்கண்ட பாஷாண சத்துக்கள் பற்றிக் குருடாராகச்செய்து அல்லது குருட்டுக் குணமாகச் செய்து, விழியின் சுபாவநிறத்தை மாறறி, இளம்பச்சையென்றும், முதிர்பச்சை யென்றும், நீல நிற மென்றும், ஊதாநிறமென்றும், மஞ்சள் வெண்மை நிறமென்றும் அதனைப்பேதித்து, அது சரியாயறியத்தக்க பார்வைச் சக்தியையிழக்கச் செய்துவிடுகின்றன. சில சந்தர்ப்பங்களில் சிறுவர்கள் சரீர சுட்கமடைந்து நரம்புகளில் விஷகுணமேறி யிருப்பதால், தேகம் தளர்வடைந்து கூனர்களாகவும் உதறுகாலர்களாகவும் தேகவிச்சின்ன மடைகின்றார்கள். சில சமயங்களில் ஷை விஷகுணமானது மற்றிதராஜீவ இந்திரியங்களில் பற்றுவதிலும் மேலாக அடிக்கடி ஹிருதய கமலத்தைப் பற்றிக்கொள்ளுகின்றது. அதனால் நெஞ்சிடிப்பு, நெறி தவறல், தீவிரத்தன்மை, தீவிரவேதனை, சுடுந்தன்மை முதலிய துர்க்குணங்கள் மிகுகின்றன; நாடி துர்ப்பலப்பட்டு மெலிந்துவீழ்த்தக் கூடிய நிலைமையில் அது சரீரத்தளர்ச்சியையும் உண்டாக்குகின்றது. சிலர்க்கு அதனால் ஈரல் வியாதியும் ஈரல கனப்பெருக்கமென்னும் பாண்டுநோயு முண்டாகின்றன. இவ்விஷகுணத்தால் சாதாரணபுஷ்டி போஜனத்திற்கும் ஹானி யுண்டாகின்றது. அஃதாவது அது ஜீரணசக்தியையும் குறைத்து விடுகின்றது; சில சமயம் வாலிபர்கள் விருத்தியாகும் சரீராரோக்கியமான வளர்ச்சி கெட்டழிகின்றார்கள். புகையிலையைப் பின்பற்றப்பின்பற்ற அஃது அகால மரணத்திற்கும் காரணமாகின்றது; க்ஷய முதலான பலவகைத்தான வியாதிகளேற்பட வழியாயு மிருக்கின்றது. வார்த்திபமென்னும் வயது முதிர்ச்சியில் உதடுகளிலும் நாவிலும் பிளவைக ளுண்டாகின்றவைகட் கெல்லாம் ஷை புகைச்சுருட்டு உபயோகமே காரணமாயிருக்கின்றது. இதனால் சில சமயங்களில் ஜீரணேந்திரியங்களுந் துன்பப்படுகின்றன. இன்னமும் ஷை புகையிலையைப் பொடிசெய்து தூள் ஆக உபயோகப் படுத்தும்போது, அஃது உசுவாச நிசுவாசஞ்செய்யும் உள்ளுறுப்புகளில் ஒருவகையான புடைப்பும் அரிக்குணமும் உண்டாக்குகின்றது.

இவ்வகையான நடவடிக்கையில் உண்டாகும் விஷ குண முள்ள சத்துக்களைப்பற்றி ஆலோசிக்கு மிடத்து, ஒருபவுன் நிறையுள்ள புகையிலையில் 100 க்குச் சராசரி 380 நெல் லிடை அல்லது 300 மனிதர்களைக் கொல்வதற்குப் போது மான (Nicotine) விஷச்சத்து இருக்கின்றதென்று நாமே தெரிந்து கொள்ளக் கூடியதாம். ஷை புகையிலையிலுள்ள (Nicotine) ஷை விஷச்சத்தின் ஒரு நெல்லிடையில் 10பாகத் தில் ஒரு பாகமானது ஒரு நாயினை மூன்று நிமிஷத்திற்கொல் லும். அதன் எண்ணெயாம் திரவத்தின்பிந்து (துளி) ஒன்று பூனை யொன்றை மூன்று நிமிஷத்திற் கொல்லும். ஆகவே, வாயரோச கம்,சிலசமயம் மயக்கம்,கடைசியாய் மரணம் முதலிய விசேஷங்க ளியாவும் இந்தப்புகையிலை யுபயோகத்தாலுண்டாம். புகையிலைச் சுருட்டுபயோகம் அடங்கியுள்ள (Nicotine) விஷகுண சத்து முத லிய பலவகைப் பாஷாணங்களுடன், முக்கியாதாரமாகிய ஜீவ உஷ் ணத்தைத் தணித்தல், விசாலமான யுக்தியைக் கெடுத்தல், தாது வைரியான ஜலவாயு (அஃதாவது நீரண்டப்) உற்பவம், சுன்ன மாகச் செய்யும் கரிசத்து கரியமல எரிச்சுன்னம் கரியபுளிப்பான திரவம் புருஷாரூபகாரியாகிய வீரியத்தைக் குறைக்குந் திரவ சத்து முதலியபவைகளையும் விருத்தி செய்கின்றது. தவளை பட்சி கள் போன்ற சிறிய ஜெந்துக்கள் ஒரு நெருக்கமான விடத்தில் புகையிலையின் புகையை சுவாசிக்க நேர்ந்தால், உடனே மரண மடைகின்றன.

புகையிலையானது திடசரீரத்துள்ள ஜீவதாதுவை நாசமா கும்படி செய்கின்றதென்பது மாத்திரமல்ல; புத்தியையுங்குறைப் படுத்தும் குணமுங் கொண்டிருக்கின்றது. அபினியை யுபயோகப் படுத்துகிற ஒருவன் எப்படி பொய் சொல்லவும் களவு செய்யவும் துணிய மனமுடையவனா யிருப்பானோ, அப்படியே புகை யிலையை யுபயோகப் படுத்துகிறவனும் பொய் சொல்லவும் களவு செய்யவும் உற்சாகமன முடையவனா யிருப்பான்.

இது புத்தியைக்கெடுத்து, நல்ல விவேகத்தையும் நுட்ப யுக்தியைத்தரும் சூட்சும அறிவையும் மழுங்கும் படிசெய்து, சுறு சுறுப்பான மனிதர்களையும் மந்தப்படச் செய்து, சிலரை வைத்திய ஆஸ்பத்திரிக் கனுப்பியும் வருகின்றது.

இன்னும் இந்தப் புகையிலைப் பழக்கமானது சாராய விச்சையையுந் தூண்டுகின்றது. அஃதாவது புகையிலைச் சுருட்டுபயோகமுள்ள ஒருவன் எளிதாகச் சாராயமு முபயோகப்படுத்துவன் என்பது தாத்பரியம். இப்புகையிலைப் பழக்கமானது ஒருவனைப் போதை தரக்கூடிய மதுபானத்தை யுட்கொள்ளச் செய்வதைவிட, அதன் விசேஷ இச்சையில் அஃதாவது போதை வெறியாகும் மிக்க பலமான பந்தத்தில் அவனைக் கட்டுப்படுத்து கின்றது.

இவ்வுண்மைகளியாவும் ஷை புகையிலை வியாபார தேசங்களில் மிகுச்சாதாராண பழக்கமுடையனவாய் விட்டன. (அமெரிக்கா) சிக்காக்கோவிலுள்ள (Swiff & Co.) சுபிப் அண்ட்கம்பெனியானது சிகரெட் உபயோகமுடைய எவனும் தங்கள் கம்பெனியில் எவ்வித வேலைக்கும் விண்ணப்பஞ் செய்துகொள்ளக் கூடாதென்று விளம்பரஞ் செய்திருக்கின்றது. அப்படியே (John Wana-maker) முதலிய மற்றவர்களும் ஷை புகையிலை யுபயோகத்தைத் தடுக்கப் பெருமுயற்சிகள் செய்து வருகின்றார்கள்.

இதுகாறும் கூறியது இங்கிலீஷினின்றும் மொழிபெயர்த்த விஷயமாம். அதன்படி நம்மனோர் அநுபவத்தினுமுண்டு. புகையிலைச்சுருட்டு அதிகமா யுபயோக முடையவர்களிற் சிலருக்கு இந்திரியம் நீத்துப் புத்திர சந்தானமில்லா திருந்ததையும் நம்மில் அநேகர் கேட்டிருப்பார்கள். வேறு வகையில் புகையிலைச் சுருட்டுபயோகிகளுக்கும் மூக்குத்தூள் உபயோக முடையார்க்கும், ஆசாரமென்பது கொஞ்சமேனு மிருக்கமாட்டாதென்பது பிரத்தியட்சம். அவர்கள் எச்சில் தீட்டின்றிக் கேவலமான கீழ்ஜாதியாரைப்போல் கண்டபடி எச்சில்சுருட்டைக்கையிற் பிடித்தடிக்கடி தொட்டுக்கொண் டிருக்குங்கரத்தால் மற்ற வஸ்துக்களையும் தொடுகிறார்கள்; மூக்கிலுள்ள சளியைச் சிந்திக்கொண்டே கரத்தினை நன்றாய்த் துடைத்தும் துடைக்காமலும் பொடிடப்பியினைத் திறந்து பொடியெடுத்து ஷை சளிதுவாரமாகிய மூக்கிலடைத்துக் கொள்ளுகின்றார்கள்; இதற்குள் பக்கத்துள்ளார் கரமேந்தினால் அப்போதே வேறு சிட்டிகையுமெடுத்து வழங்குகின்றார்கள். இவையாவும் ஆசாரக்குறைவும் அவமரியாதையான செய்கையுமா மென்று சில மரியாதையுடையார் சற்று இரகசியமாய் அப்பியசிக்கின்றார்கள்; சிலரோ மரியாதை யென்பதென்ன

ரூபமா யிருக்கும் என்று கேட்பார் போன்று பகிரங்கமாய்ச் செய்கின்றார்கள். நிற்க, இப்படிசெய்து பழக்கங் கொண்டவர்களுக்கு ஷி புகைச் சுருட்டோ பொடியோ ஒரு சமயம் இல்லாவிடில், மகாசங்கட மடைகின்றார்கள். ஒரு வைதிக பிராமணன், கேவலம் குப்பைவாருந் தோட்டி யிடத்தேனும் பொடி பெற்றுக்கொள்வோமா என்றுஎண்ணுகின்றான். எஜமானன் கேவலம் வேலைக்கார னிடத்தும் பொடி கேட்கக்கூடிய அற்ப நிலைமைக்கு வந்து விடுகின்றான். இந்த அநுஷ்டானத்தைப் பின்பார்ப்பவர்களேனும் பல வியாதிகளுக்கும் அநாசாரத் தன்மைக்கும் அவமதிப்பிற்கும் காரணமாகிய ஷி புகையிலையை எவ்வகையும் உபயோகப் படுத்தா திருப்பது மிக்க நன்மையென் றுணரவேண்டும்.

160957

ஒரு துண்டுப் பத்திரிகை.

யுத்தம்.

இப்போது ஐரோப்பாவில் நடக்கும் யுத்தம் மிகு உக்ரமாக நடந்துவருகின்றது; அக்டோபர் மாதத்திற்குள் யுத்தத்தை முடிக்கவேண்டுமென்று ஜெர்மன் சக்ரவர்த்தியார் கீழரங்கத்தில் வார்சாவைப் பிடிக்கப் பகீரதப் பிரயத்னஞ் செய்துவருகின்றனர்; அதன் பின்னர் மேற்கரங்கத்தில் வந்து எவ்விதமாகவாகிலும் கலேயைப் பிடித்துவிட வேண்டுமென்று கூறுகின்றனர். இப்போது மேற்கரங்கத்தில் ஜெர்மானியர் தோல்வியடைந்து வருவது அவர்களுக்கு ஒருவிதத்தினாலும் வெற்றியுண்டாகாதென்பதைக் குறிப்பிடுவதாம். ஜெர்மன் கீழ்நீர்க் கப்பல்கள் பிரயாணிக் கப்பல்களையும், சாமான் கப்பல்களையும் கடற்கிரையாக்கி வருகின்றன. இவ்வாறு செய்வதால் இங்கிலாண்டை உணவுப்பொருள்களில்லாமல் பட்டினிகிடக்கச் கெய்யலாமென்பது ஜெர்மன் சக்ரவர்த்தியாரின் உத்தேசம். நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்குமென்பதனை ஜெர்மன் சக்ரவர்த்தியா ரறியாதிருப்பது மதிமயக்கே!

இத்தாலியர் ஆஸ்டிரிய எல்லையிற் பிரவேசித்து ஆஸ்டிரியரைப் பின்னடையச்செய்து வருகின்றனர். ஆஸ்டிரியர் இதுகாறும் ஒரு வெற்றியுமடையா திருப்பது அவர்களுடைய பலவீனத்தைக் காட்டுவதாம்.